**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு மழை மற்றும் குளிர்காலங்களில் பயன்படுத்த போர்வைகள் வாங்கி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 85** **நாள்: 14.11.2017**
**ஹேவிளம்பி – ஐப்பசி, 28**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (1டி) எண் 43, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 23.12.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 314/மஇநி.3/2017, நாள் 02.06.2017 மற்றும் 22.08.2017.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015ஆம் நிதியாண்டில் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் 1183 இல்லவாசிகளுக்கு, மழை மற்றும் குளிர் காலங்களில் பயன்படுத்த ஏதுவாக, 'கோ–ஆப்–டெக்ஸ்' நிறுவனத்தின் மூலம் ஒரு போர்வையின் விலை ரூ.400/– வீதம், 1183 போர்வைகள் வாங்கி வழங்குவதற்கு ரூ.4,73,200/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் தமிழ்நாட்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கென 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் இயங்கி வருகிறது எனவும், அந்த இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம் மற்றும் ஏனைய வசதிகள் அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவும், மூன்று வருடத்திற்கு ஒரு முறை என போர்வைகள் வாங்கி வழங்கப்பட்டு வருவதாகவும், 2014ஆம் நிதியாண்டில் இல்லவாசிகளுக்கு போர்வை வழங்கியது போல் 2017–2018ஆம் ஆண்டிலும் குழந்தைகள் உட்பட 981 இல்லவாசிகளுக்கு (ஆண்கள்–462, பெண்கள்–448, குழந்தைகள்–71) ஒரு போர்வை ரூ.300/– விலையில் 981 போர்வைகள் வாங்கி வழங்குவதற்கு ரூ.2,94,300/–க்கு அனுமதி ஆணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வேண்டி அரசிற்கு கருத்துரு அனுப்பியிருந்தார். மேலும், போர்வைகள் வாங்கி வழங்கிட, கணக்குத் தலைப்பில் ஏற்கனவே உள்ள ரூ.1,76,668/– போக மீதத் தொகை ரூ.1,17,632/–ஐ 2017–2018ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு போர்வைகள் வழங்கப்பட்டு 3 ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ளதாலும், அவ்வில்லங்களில் வசிக்கும் குழந்தைகள் மற்றும் வயதானவர்களின் நலனை கருத்தில் கொண்டு, வரும் மழை மற்றும் குளிர் காலங்களில் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக 981 இல்லவாசிகளுக்கு ஒரு போர்வை ரூ.300/– வீதம் வாங்கி வழங்கிட தேவைப்படும் செலவினத் தொகையான ரூ.2,94,300/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து முன்னூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – I–மாநிலச் செலவினங்கள் – AI–தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 46–உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள். (து.தொ.கு.2235–02–104–AI–4609).**

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.1,17,632/–, 2017–2018ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தை 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாமல் நிதித் (ச.ந.) துறைக்கு உரிய நேரத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண் 56316/நிதி/சந/2017, நாள் 09.11.2017 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1861 (ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்று)–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

நிதித் (சந/வ.செ.பொது–II) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்